# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1957 - 2016 මාර්තු මස 04 වැනි සිකුරාදා - 2016.03.04

*1957 ஆம் இலக்கம் – 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *336* |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *340* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, மாச்சு மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, மாச்சு மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, சித்திரை மாதம் 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, ஏப்பிறல் 15.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | தம்பலகாமம் | தம்பலகாமம் மேற்குப் பிரிவின் பிறப்பு பிறப்பு மற்றும் இறப்பு (தமிழ்) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

3-28

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - அநுராதபுரம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, சித்திரை மாதம் 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, பெப்புருவரி 12.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அநுராதபுரம் | நாச்சாதூவ | துருவிள பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நுவரகம்பலாத்த பிரிவில் விவாக (பொது)/கண்டிய) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அநுராதபுரம் |

3-29

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, சித்திரை மாதம் 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, பெப்புருவரி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | மாதம்பை | குடாபிங்கிரிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிட்டிகல்கோறளை வடக்குப் பிரிவில் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |
| புத்தளம் | ஆரச்சிக்கட்டு | மையாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பிட்டிகல்கோறளை வடக்குப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம் |

3-30

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, சித்திரை மாதம் 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, மாசி 15.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| காலி | யக்கலமுல்ல | காலி மாவட்டத்தின் கொட்டவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் தல்பேபற்று கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | நெலுவ | காலி மாவட்டத்தின் கொட்டவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஹினிதும்பற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | ஹிக்கடுவை | காலி மாவட்டத்தின் வெல்லபடபற்று பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

*3-31*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய முஸ்லிம் விவாகப் பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2016, பெப்புருவரி 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | தொலுவ | ஆண்டியாகடவத்த பிரதேசத்தின் உடபலாத பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கண்டி |

3-32

---

திருத்தம்

**பாதுகாப்பு அமைச்சு**

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்த்தல் - 2016

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பம் சம்பந்தமாக 2016.02.19 ஆந் திகதிய 155 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் 584/2 ஆம் இலக்க அறிவித்தல் சம்பந்தமானது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது :-

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமையைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவால் நடாத்தப்படும் வாய்மொழி மூலமான பெறுபேறுகளின் அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட உள்ளனர். இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக (இல. 5 ஐப் பார்க்கவும்.) புள்ளிகள் வழங்கப்படவுள்ளன.

குறிப்பிட்ட வர்த்தமானியில் உள்ள ஏனைய விடயங்கள் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

2016, பெப்புருவரி 24.

3-323/2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**பாதுகாப்பு அமைச்சு**

பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்த நிறுவனமொன்றுக்கு ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி II இற்கு திறந்த ஆட்சேர்த்தல் - 2016

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பம் சம்பந்தமாக 2016.02.19 ஆந் திகதிய 155 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் 584/1 ஆம் இலக்க அறிவித்தல் சம்பந்தமானது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட வர்த்தமானியின் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் உள்ள 3.3 என்ற பகுதி பின்வருமாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது

3.3 2016.03.18 ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

குறிப்பிட்ட வர்த்தமானியில் உள்ள ஏனைய விடயங்கள் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை.

செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

2016, பெப்புருவரி 24.

3-323/1

---

**கடற்றொழில், நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு**

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் (தொடர்புடைய அலுவலர் சேவை தொகை) கடற்றொழில் அலுவலர் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் தலைமை அலுவலகம், வடக்கு-கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் அமைந்துள்ள கரையோர மாவட்டங்களில் 15 இலும் கடற்றொழில் அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, இவ்வறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இது வெளிக்கள சேவையாதலால் இப்பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மிகவும் பொருத்தமானதாக அமையும்).

இப்பரீட்சை குறிப்பிட்ட சில நகரங்களில் மட்டும் நடத்தப்படும். அத்துடன் குறித்த நகரங்கள் மற்றும் அந்நகரங்களின் இலக்கம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட் டுள்ளது. இவ்வட்டவணையின் பிரகாரம் விண்ணப்பப்படிவத்தின் சம்பந்தப்பட்ட பந்திகள் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்பட்ட நகரம்/நகரங்கள் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. கீழ்க்குறிப்பிடப்படும் பரீட்சை நிலையம் ஒன்றிற்கு போதுமான அளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து, அந்த நிலையம் இரத்துச்செய்யப்பட்டு அதற்கு அண்மிய நிலையத்துக்குக் குறித்த பரீட்சார்த்திகள் அனுப்பப்படுவர். சகல நிலையங்களுக்கும் அல்லது பல நிலையங்களுக்கும் பரீட்சார்த்திகள் போதுமான அளவு எண்ணிக்கையில் இல்லாத பட்சத்தில் இப்பரீட்சையை கொழும்பில் மட்டும் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

| நகரம் | நகர இல. |
|---|---|
| கொழும்பு | 01 |
| மாத்தறை | 02 |
| பதுளை | 03 |
| இரத்தினபுரி | 04 |
| கண்டி | 05 |
| குருநாகல் | 06 |
| புத்தளம் | 07 |
| அநுராதபுரம் | 08 |
| வவுனியா | 09 |
| யாழ்ப்பாணம் | 10 |
| திருகோணமலை | 11 |
| மட்டக்களப்பு | 12 |

1. **சேவை நிபந்தனைகள்**.- அரச சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள் மற்றும் பொது நிர்வாக சுற்றுநிருபம் 6/2006 (IV) இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்பட்ட MN-4-2006A ஆட்சேர்ப்புத் திட்டத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் கடற்றொழில் அலுவலர் III ஆம் தரத்தில் நியமிக்கப்படுவர்.

இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

2. **சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்**.- சம்பளக் குறியீட்டு இல. MN-4-2006A.

**சம்பள அளவு**.- ரூபா 15,215 - 10 x 215 - 4 x 240 - 7 x 320 - 15 x 360 - ரூபா 25,965 ஆகும்.

3. **கல்வித் தகைமை**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் உயிரியல், நுண்ணுயிர், விலங்கியல், கடற்றொழில் விஞ்ஞானம், கடற்றொழில் மற்றும் சமுத்திர விஞ்ஞானவியல், உணவு விஞ்ஞானவியல் தொடர்பான விஞ்ஞானவியல் பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்.

4. **தொழில்சார் தகைமை**.- ஏற்புடையதன்று.

5. **அனுபவம்**.- ஏற்புடையதன்று.

6. **தேகாரோக்கியம்**.- இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்படும் ஒருவர் இலங்கையில் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற் தகுதியையும் மனோ வலிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **ஏனைய தகைமைகள்** :

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் சிறந்த நற்பண்புகளைக் கொண்டவராக இருத்தல் ;

(iii) பதவியில் நியமிப்பதற்குத் தேவையான சகல தகைமை களையும் விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னராக குறித்த தகைமைகளை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

8. **வயதெல்லை**.- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (இதற்கமைய வயது சம்பந்தமாக தகைமைகளை நிறைவுசெய்துள்ள விண்ணப்பதாரரின் பிறந்த திகதி 1995.04.04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவும் 1981.04.04 ஆந் திகதியாக அல்லது அதற்குப் பின்னதாகவோ அமைய வேண்டும்.)

9. **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் வரிசைக் கிரம அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளிலும் சேர்த்து ஆகக்கூடிய புள்ளிகளின் வரிசைக் கிரமத்தில் தகுதியானவர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய இப்பதவியில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பதற்கான இந்தப் போட்டிப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழி ஆகிய இரு மொழிகளில் மட்டுமே நடாத்தப்படும்.

(ஆ) ஆட்சேர்ப்புப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பதாரர் தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழியின் மூலமே சகல வினாப்பத்திரங்களுக்கும் விடை எழுத வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழியினைப் பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரிக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

9. **எழுத்துப் பரீட்சை :**

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்தி பெறுவதற்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 1 மணி நேரம் | 100 | 40% |
| 2. கட்டுரை மற்றும் சாராம்சம் | 1 1/2 மணி நேரம் | 100 | 40% |
| 3. பொது அறிவு | 1 மணி நேரம் | 100 | 40% |

| *வினாப்பத்திரம்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. நுண்ணறிவு | அபேட்சகரின் தர்க்கிக்கும் ஆற்றல், விளக்கும் ஆற்றல் மற்றும் சரியான சம்பவ அனுமானங்களுக்கு எடுக்கும் ஆற்றல் மற்றும் நுண்ணறிவை அளவீடு செய்யும் நோக்குடன் இந்த வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வினாத்தாள் பல்தேர்வு மற்றும் குறுகிய விடையளிக்கும் வகையிலான வினாக்களை உள்ளடக்கியது. இதில் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 2. கட்டுரை மற்றும் சாராம்சம் | சமகால சமூக சம்பவமொன்றை அல்லது கலந்துரையாடல் குறிப்பு ஒன்றை வாசித்து விளங்கி விபரிக்கும் ஆற்றலை அளவிடுதல் மற்றும் கட்டுரையை சாராம்சம் எடுக்கும் ஆற்றல் சம்பந்தமான வினாத்தாள் ஆகும். அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 3. பொது அறிவு | இலங்கையின் மற்றும் உலகத்தின் நிதி பொருளாதாரம், வர்த்தகம், அரசியல், சர்வதேசம் சம்பந்தமானவை, முகாமைத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், சமூக மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் முக்கியமான நிகழ்வுகளுக்கு அமைவாகவும் முக்கியமாக தேசிய மற்றும் வெளிநாட்டு கடற்றொழில் துறை சம்பந்தமான அடிப்படை அறிவு போன்றவற்றைப் பரிசோதித்து பார்ப்பதற்கான பல்தேர்வு மற்றும் குறுகிய விடையளிக்கும் வகையிலான 50 வினாக்களை உள்ளடக்கியது. இதில் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |

11. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

| | *புள்ளிகள் வழங்கும் முக்கிய விடயங்கள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்திக்கான புள்ளிகள்* |
|---|---|---|---|
| (i) | மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடைய தன்று |
| (ii) | கணினி சம்பந்தமான அறிவுத் தகைமை | 15 | |
| (iii) | ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 | |
| (iv) | நேர்முகப் பரீட்சைக் குழுவினால் இனம் காணப்படும் தகுதிகள் | 05 | |
| | மொத்தப் புள்ளிகள் | 50 | |

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகவிருப்பதுடன், இக்கட்டணத்தை விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமான விடயத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்கு ஏதுவாக நாட்டில் உள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தலாம். விண்ணப்பதாரரின் பெயரில் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை விண்ணப்பதாரர் தம்முடன் வைத்திருப்பது உபயோகமானது. எக்காரணம் கொண்டும் இப் பரீட்சைக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

13. **விண்ணப்பிக்கும் முறை**.- விண்ணப்பம் A4 அளவிலான கடதாசியில் இந்த விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படல் வேண்டும். அவ்விண்ணப்பப்படிவம் 1 தொடக்கம் 3.1 வரையான தலைப்புகள் முதலாம் பக்கத்திலும், 3.2 தொடக்கம் 5 வரையானது இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் இருக்குமாறு 3 பக்கங்களில் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும்போது தலைப்பில் குறிக்கப்பட்டிருக்கும் பரீட்சையின் பெயர் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடல் வேண்டும்.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தத்தமது திணைக்கள அல்லது நிறுவனத் தலைவருக்கு ஊடாக விண்ணப்பம் முடிவுறும் திகதிக்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்படும் பந்தியில் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கடற்றொழில், நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகத்தின் தனிப்பட்ட முகவரிக்கோ அல்லது வேறு எந்தவொரு அலுவலரின் தனிப்பட்ட பெயருக்கோ பெயரிட்டு விண்ணப்பங்களை அனுப்புதல் கூடாது.

இவ்விளம்பரத்தின் இறுதியில் காணப்படும் மாதிரிப்படிவத்துக்கு அமைய முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2016.04.04 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைப் பிரிவு, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" எனும் முகவரிக்கு கிடைக்கும் பொருட்டு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை உள்ளடக்கியிருக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் (தொடர்புடைய அலுவலர் சேவைத்தொகை) கடற்றொழில் அலுவலர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிடல் வேண்டும்.

குறித்த தகைமைகளைக் கொண்டிராத அல்லது சகல விடயங்களையும் பூர்த்திசெய்யப்படாத அல்லது காலதாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பம் அல்லது அது சம்பந்தமான கடிதங்கள் தபாலில் தொலைந்துவிட்டது என்பன போன்ற முறைப்பாடுகள் எதுவும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது. எனவே குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ விண்ணப்பங்களை அனுப்புவது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

*14.* **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மட்டும் விண்ணபித்தார்கள் என்ற ஊகத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குள், விண்ணப்பம் கையேற்கும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி, விண்ணப்பதாரரின் கையெழுத்து மற்றும் கையெழுத்தினை உறுதிப்படுத்தியவரின் பெயர் மற்றும் திணைக்களத் தலைவரின் சான்றுடன் முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தை அனுப்பிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவார். விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கிய பின், பரீட்சைத் திணைக்களம், இது பற்றி செய்திப்பத்திரிகைகளில் விளம்பரத்தை வெளியிடும். இவ்விளம்பரத்தின் பின் 2 அல்லது 3 நாட்களுக்குள் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், இதுபற்றி பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படல் வேண்டும். அப்போது விண்ணதாரியின் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய ஆள் அடையாள அட்டையின் இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு கோருமிடத்து விண்ணப்பதாரர் தான் கைவசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பியதற்கான பற்றுச்சீட்டு போன்ற விபரங்கள் முக்கியமானதாகும். விண்ணப்பதாரர் கொழும்புக்கு வெளியே வசிப்பவராயின் அவரின் தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்துடன், மேற்படி விபரங்களுடன் விண்ணப்பித்தால் அவருக்கு அனுமதிப்பத்திரத்தை தொலைநகல் மூலம் அனுப்ப முடியும். பரீட்சார்த்தி ஒருவர் அனுமதிப்பத்திரத்தை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி யிடம் சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில், அவர் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) விண்ணப்பதாரி, தனக்கு அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட பரீட்சை மண்டபத்தில், பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் முதல் நாள் பரீட்சைக்குத் தோற்றும்போது சம்பந்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சை நிலைய பொறுப்பாளரிடம் கையளித்தல் வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்ட விதிமுறைகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் தரப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியதன் மூலம் அவர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் எனக் கருதலாகாது.

(ஈ) பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிமுறைகளை எவரேனுமொருவர் மீறினால், அவர் அக்குற்றத்திற்காக பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவார்.

*15.* **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்துக்கும் பரீட்சை நிலையப் பொறுப்பாளர் திருப்தியுறும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்கலாம் :-

(1) ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*16.* **கவனத்திற்கொள்ள வேண்டியவை :**

(அ) விண்ணப்பப்படிவத்துடன் எவ்வித ஆவணங்களோ அல்லது பிரதிகளோ இணைத்தல் ஆகாது ;
(ஆ) கோரப்படுமிடத்து ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

தற்போது அரச/உள்ளூராட்சி சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் உள்ள அலுவலர்கள் தமது விண்ணப்பப்படிவங்களை, தத்தமது திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக்கொள்வது கட்டாயமாகும். நிறுவனத்தின் மூலம் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளின் கையொப்பத்தைத் தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவரினால் உறுதிசெய்துகொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர், ஓய்வுபெற்ற அதிபர், பிரதேச கிராமசேவை அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளையிடும் தளபதி ஒருவர், 2,40,360 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண சபையில் சேவையாற்றும் நிரந்தரப் பதவிநிலை தரத்திலுள்ள அதிகாரி, பௌத்த விகாராதிபதி அல்லது மத வழிபாட்டுத் தளத்துக்குப் பொறுப்பாக இருக்கும் மத குருமார்கள் யாரேனும் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

*17.* **ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் 40% இற்குக் கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் வரிசைக்

கிரம அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு எதிர்பார்க்கும் எண்ணிக்கையின் இருமடங்குத் தொகையினர் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்ற புள்ளிகளின் வரிசைக்கிரம அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற தகுதியானவர்கள் தோந்தெடுக்கப்படுவர்.

17.1 *பெறுபேறுகளை வெளியிடுதல்.-* சம்பந்தப்பட்ட பெறுபேறுகள் ''பணிப்பாளர் நாயகம், கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் கையளிக்கப்படுவதோடு, சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படும். அல்லது www.results.exam.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு "பரீட்சை ஆணையாளர் நாயகம்" நடவடிக்கை மேற்கொள்வார்.

18. **பொய்யான தகவல்களை வழங்குதல் தொடர்பானது.-** எவரேனுமொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமையற்றவர் என்பது வெளிப்படின் பரீட்சைக்கு முன்னர், பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சையின் பின்னர் ஆகிய ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தெரியவரின் அவரது பரீட்சார்த்த நிலையானது செல்லுபடியற்றதாக்கப்படும். பரீட்சைக்குத் தரப்பட்ட தகவல்களில் ஏதேனும் முக்கிய விபரங்களை தன்னிச்சையாக மறைத்திருந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

இந்த விதிமுறைகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் சம்பந்தமாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைய மேற்கொள் ளப்படும்.

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் விளம்பரத்தில் ஏதேனும் ஒரு மொழியில் முன் பின்னான முரண்பாடுகள் ஏற்பட்டால் அதில் சிங்கள மொழியிலான விளம்பரமே மேலோங்கி நிற்கும்.

பணிப்பாளர் நாயகம்,
கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம்,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களத்தின் (தொடர்புடைய அலுவலர் சேவைத் தொகை) கடற்றொழில் அலுவலர் III ஆம் தரத்துக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015**

**Open Competitive Examination for Recruitment to the Post of Fisheries Officer - Grade III of the Department of Fisheries and Aquatic Resources - 2015**

| | |
|---|---|
| சுட்டிலக்கம் :<br>(அலுவலக பாவனைக்கு மட்டும்) | ☐ |
| பரீட்சைக்குத் தோற்றும் மொழி :<br>சிங்களம் - 2<br>தமிழ் - 3<br>பரீட்சை மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. (உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் குறிக்கவும்.) | ☐ |

1. பெயர் :
   1.1 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
   1.2 முதல் எழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியதாக பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.
   (உதாரணம் : GUNAWARDHANA H. M. S. K.)
   1.3 முழுப்பெயர் (தமிழ்/சிங்களம்) :----.

2. முகவரி :
   2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய (கெப்பிட்டல்) எழுத்தில்) : ----.
   2.2 நிரந்தர முகவரி (தமிழ்/சிங்களம்) :----.
   2.3 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய (கெப்பிட்டல்) எழுத்தில்) :----.
   2.4 அலுவலக முகவரி (தமிழ்/சிங்களம்) :----.
   2.5 அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய (கெப்பிட்டல்) எழுத்தில்) :----.
   2.6 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :
   ☐☐☐☐☐☐☐☐☐☐
   2.7 பால் (ஆண்/பெண்) : பெண் -1, ஆண் -0 ☐
   (தொடர்புடைய இலக்கத்தைக் குறிப்பிடுக.)
   2.8 தொலைபேசி இல. :
   ☐☐☐☐☐☐☐☐☐☐

3. சமூக நிலை :
   3.1 விவாகமாகாதவர்/விவாகமானவர் :
   விவாகமானவர் - 1
   விவாகமாகாதவர் - 2 ☐
   (தொடர்புடைய இலக்கத்தைக் குறிப்பிடுக.)
   3.2 பிறந்த திகதி :
   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
   3.3 2016.04.04 ஆந் திகதியன்று வயது :
   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை :
   4.1 அடிப்படை பட்டத் தகைமை :
   4.1.1 பட்டம் :----.
   4.1.2 தோற்றிய பாடம் :----.
   4.1.3 பட்டம் பெற்ற வருடம் :----.
   4.1.4 பல்கலைக்கழகம் :----.
   4.2 பட்டப்பின் படிப்புத் தகைமை :

| பட்டம் | சம்பந்தப் பட்ட பாடம்/ துறை | பெற்ற சித்தி | வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

4.3 கணினி இயலுமை :

| பாடநெறி | காலப்பகுதி | நிறுவனம் | வருடம் |
|---|---|---|---|
| | | | |

4.4 ஆங்கில மொழித் தேர்ச்சி (தோற்றிய பாடநெறி சம்பந்தமான விபரம் குறிப்பிடுக.) :--------------------
----------------------------------------------------
----------------------------------------------------
----------------------------------------------------

4.5 துறைசார்ந்த தொழில் தகைமை (இருப்பின்) :-----------
----------------------------------------------------
----------------------------------------------------

5. சேவை அனுபவம் (இருப்பின்) :------------------------------
----------------------------------------------------------
----------------------------------------------------------

6. வழங்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் :

(i) பற்றுச்சீட்டு இல. :----.
(ii) திகதி :----.
(iii) பணம் செலுத்திய அலுவலகம் :----.
(iv) செலுத்திய தொகை, ரூபா :----.

| |
|---|
| பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை வைத்திருப்பது உபயோகமானது) |

**விண்ணப்பதாரியின் உறுதியுரை (உறுதிப்படுத்துபவருக்கு முன்னால் கையெழுத்திடல் வேண்டும்) :**

இங்கு என்னால் தரப்பட்ட விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதுமென இத்தால் உறுதி கூறுகிறேன். பரீட்சைக் கட்டணம் செலுத்திய இல. ..... ................................. மற்றும் .............................. ஆந் திகதி கொண்ட பற்றுச்சீட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் உறுதிகூறுகிறேன். இப்பரீட்சைக்குரிய சட்டதிட்டங்களுக்கு அமைய நான் தகைமையற்றவன் என பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது பரீட்சார்த்தத் தன்மை இரத்துச் செய்யப்படும் என்பதற்கு உட்படுவேன் என்பதற்கு உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப் படுவேன் என்பதற்கும் நான் உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**
இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/செல்வி ........................................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் எனவும், 2016 ஆம் ஆண்டு ............................. மாதம் ........................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும், அவர் பரீட்சைக்கு குறித்த பரீட்சைக்கான பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

(1) உறுதிப்படுத்துபவரின் பெயர் :----.
(2) பதவி :----.
(3) முகவரி :----. (பதவி முத்திரை).

8. **திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் உள்ள அலுவலர்களுக்கு மட்டும்.)

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ........................................ என்பவர் இந்த நிறுவனத்தில் .................................. ஆக சேவையாற்றி வருகிறார் எனவும், இவரைத் தெரிவுசெய்யப்படுமிடத்து தற்போது இவர் வகிக்கும் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவர் அல்லது
அவரால் அதிகாரமளிக்கப்பட்ட
அலுவலரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
(பதவி முத்திரை)
முகவரி :----.
திகதி :----.

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை-2016***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 04.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.02.2016 |
| | | வெள்ளி | 11.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.02.2016 |
| | | வெள்ளி | 18.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.03.2016 |
| | | வியாழன் | 24.03.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.03.2016 |
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 01.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.03.2016 |
| | | வெள்ளி | 08.04.2016 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.03.2016 |
| | | வெள்ளி | 15.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.04.2016 |
| | | வெள்ளி | 22.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.04.2016 |
| | | வெள்ளி | 29.04.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.04.2016 |
| **மே** | .. | வெள்ளி | 06.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.04.2016 |
| | | வெள்ளி | 13.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.04.2016 |
| | | வெள்ளி | 20.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.05.2016 |
| | | வெள்ளி | 27.05.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.05.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.